2010 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளியை நானும் நன்றாக அறிவேன். ஏற்கெனவே சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அதுகுறித்து என்னிடத்திலே தெரிவித்திருந்தார்கள். நம்முடைய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களும் அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த வேண்டுமென்று தெரிவித்திருந்தார்கள். இந்த ஆண்டு அந்தப் பட்டியலிலே, அந்தப் பள்ளியை இணைத்துக்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். அந்தப் பள்ளி விடுபட்டிருந்தாலும் வரக்கூடிய ஆண்டுகளிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கக்கூடிய அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், எல்லா இடங்களிலும் செய்யும்போது கண்டிப்பாக விருதுநகர் மாவட்டத்திற்கும் சேர்த்து செய்து கொடுத்து விடுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

பண்ணை

***122255-திரு. எம்.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதியில் மரக்கன்று உற்பத்திப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளித்திட விரும்புகிறேன்.

ஆத்தூர் தொகுதியில் மரக்கன்று உற்பத்தி பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 11

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.270/- கோடியிலே ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை அறிவித்த நமது தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சர் மாண்புமிகு அண்ணன் வீரபாண்டியார் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையிலே பார்த்தால், கிட்டத்தட்ட ஏற்காடு தொகுதியினையொட்டியுள்ள அயோத்திபட்டிணம், வாழப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர், நரசிங்கபுரம், தலைவாசல் தொகுதியினையொட்டியுள்ள வீரகனூர் மற்றும் தலைவாசல் ஆகிய பகுதிகள் பயன்பெறுகின்றன. எங்கள் ஊரிலே ஒரு பழமொழியைச் சொல்வார்கள், ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் அடித்தோம் என்று. ஆனால், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரே கல்லில் மூன்று மாங்காய்களை அடித்துவிட்டார்கள். அதாவது, ஏற்காடு தொகுதியும் பயன்பெறுகிறது, ஆத்தூர் தொகுதியும் பயன்பெறுகிறது. அதேசமயத்தில் கெங்கவல்லி பகுதியும் பயன்படுகிறது. அந்தவகையில் துணை நிதிநிலை அறிக்கையில், கிட்டத்தட்ட ரூ.270/- கோடி நிதி ஒதுக்கி, என் தொகுதி மட்டுமல்லாமல், மூன்று தொகுதிகளுக்கும் தண்ணீர் கொடுத்த தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, ஆத்தூரிலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கேட்டேன். நான் இந்த மாமன்றத்திலே வைத்த கோரிக்கையின்படி, நமது சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று நீதிமன்றத்தினை திறப்பதற்காக வந்தார்கள். நேற்று பேசும்போதுகூட சொன்னார்கள். அதற்கான பத்திரிகையில் என்னுடைய பெயர் இல்லை. ஆனால் நான் அந்த விழாவிற்குப் போனேன். அமைச்சர் அவர்களை வரவேற்று, நான் கீழே உட்கார்ந்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர். சுந்தரம், நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களது கேள்வி மரக்கன்று உற்பத்தி பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதுதான். அதனையொட்டி துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: அந்த நீதிமன்றத் திறப்பு விழாவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிவிட்டு அமர்ந்துவிட்டார்கள்.

2010 நவம்பர் 11]

கீழே இருந்த என்னைப் பார்த்தவுடன் எழுந்து, இந்த ஒருங்கிணைந்த நீதிமன்றம் வளாகம் அமைவதற்கு உங்களது சட்டமன்ற உறுப்பினர் சட்டப் பேரவையிலே பலமுறை என்னிடத்திலே வாதாடி அதனைப் பெற்றுத் தந்துள்ளார். இந்த நேரத்தில் அதனை ஞாபகப்படுத்துகிறேன் என்று நன்றி தெரிவிக்கின்ற வகையிலே பாராட்டிப் பேசி, அந்த நீதிமன்றத்தைக் கொண்டுவருவதற்கு நான் ஆவன செய்தேன் என்று அங்கே நிரூபித்துக் காண்பித்தார்கள். அதேபோல, ஆத்தூருக்கு ஒரு R.T.O. office வேண்டுமென்று கேட்டேன். அந்த R.T.O. office-ஐ நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக. . .

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர். சுந்தரம், நீங்கள் உங்கள் கேள்விக்கே வரமாட்டேன் என்கிறீர்கள். சுற்றிச் சுற்றிப் போய்க்கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவருடைய கேள்வி என்னவென்று உங்களுக்குத் தெரியும். அமைச்சர் நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சுந்தரம், நீங்கள் கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: அந்தவகையிலே இந்தக் கூட்டம் முடிந்தவுடன் R.T.O. Office திறந்து வைக்கிறேன் என்று உறுதியளித்திருக்கின்றார்கள். அதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது கலைஞர் அவர்கள் 'மரத்தை நாம் வளர்த்தால், மரம் நம்மை வளர்க்கும்' என்று சொன்னதற்கிணங்க நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவும், பல தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் மரங்களை நட்டு வருகின்றோம். பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் காலத்திலே எப்படி சாலைகளின் இரு புறங்களிலும் மரங்கள் இருந்தனவோ, அதேபோல வனத் துறையினரின் முயற்சியோடு சாலைகளை அமைக்கின்றபோது மரத்தை வெட்டிவிடுகிறார்கள். இருந்தாலும், மறுபடியும் மரம் நடுவதற்கு வனத் துறையினர் மரத்தை வளர்த்துக் கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாகவும், நன்றாகவும் இருக்கும். அதை நாம் தொண்டு நிறுவனங்களுக்கும், சில பள்ளிகளுக்கும் மற்றும் சில அரசு நிறுவனங்களுக்கும் கொடுக்கலாம். அந்தவகையிலே வனத் துறையினர் அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மரக்கன்று உற்பத்திப் பண்ணை அமைக்கப்படுமா என்று கேட்டிருந்தார். அந்தச் செயற்குறிப்பு இல்லையென்று நான் குறிப்பிட்டிருந்தேன். மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு பல்வேறு புதிய திட்டங்களை, மரங்கள் வளர்க்கும் பரப்பை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக தனியார் நிலங்களிலே மரங்கள் வளர்ப்பது போன்ற திட்டங்களெல்லாம் அமல்படுத்தப்பட்டிருக்கின்றன.

அதேபோல, நகர்ப்புறங்களிலே அதிகமாக மாசு ஏற்படுகின்ற காரணத்தினால், நகர்ப்புறங்களிலும் உயர்ந்த மரக்கன்றுகளை நட வேண்டுமென்று கிட்டத்தட்ட 1,65,000 மரக்கன்றுகள் மாநகராட்சிப் பகுதியிலே நடப்பட்டிருக்கின்றன. இப்படிப் பல்வேறு திட்டங்களின்கீழ் மரக்கன்றுகள் நடும் பணியைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின்மூலமாக ஆங்காங்கே மரக்கன்றுகளை வளர்க்கக்கூடிய பண்ணைகளை அமைத்து இன்னும் பெரிய அளவிலே மரக்கன்றுகளைக் கொடுத்தால், பொது மக்களும் சரி அல்லது பள்ளி மாணவ, மாணவிகளும் சரி, அவர்களுடைய பிறந்த நாளில் 2 அல்லது 3 மரங்கள் என்று நடக்கூடிய வாய்ப்பைப் பெறுவார்கள். அந்தவகையிலே, வனத் துறையின் மூலமாக மரங்களை வளர்க்கக்கூடிய பண்ணைகளை அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டு அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரக்கன்றுகள், தேவைப்படுகின்ற நேரங்களில்,

2010 நவம்பர் 11]

அந்தந்தப் பகுதிகளிலே நாற்றங்கால் அமைத்து அரசாலே உருவாக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களில், புதியதாக உருவாக்கப்பட்ட அரியலூர், திருப்பூர் ஆகிய 2 மாவட்டங்களைத் தவிர 30 மாவட்டங்களில் வன விரிவாக்க மையங்கள் இருக்கின்றன. அங்கே மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உங்கள் தொகுதிக்கு அருகிலேகூட தம்மம்பட்டி, கல்ராயன், ஆத்தூர், வாழப்பாடி, ஏத்தாபூர் போன்ற பகுதிகளிலே நாற்றங்கால் அமைக்கப்பட்டு அங்கே தேவையான மரக்கன்றுகள் நடப்படுகின்றன.

2008-2009-ல் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 3,40,000 மரக்கன்றுகளும், 2009-2010-ல் 15,000 மரக்கன்றுகளும், 2010-2011-ல் 15,000 மரக்கன்றுகளும் ஆக 3,70,000 மரக்கன்றுகள் உங்கள் தொகுதியில் நடப்பட்டிருக்கின்றன. தனியார் காடுகளில் மரம் வளர்ப்பு என்று பார்த்தால் உங்கள் தொகுதியைப் பொறுத்த அளவில் 2007-2008-ல் 50,000 மரக்கன்றுகளும், 2008-2009-ல் 24,980 மரக்கன்றுகளும், 2009-2010-ல் 80,500 மரக்கன்றுகளும், 2010-2011-ல் 97,500 மரக்கன்றுகளும், ஆக மொத்தம் 2,52,980 மரக்கன்றுகள் 849.95 ஏக்கர் நிலப்பரப்பிலே நடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS

28—

வட்டச் சாலை

***57024-திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதியில் மதுரை, சங்கரன்கோவில், செங்கோட்டை, சேரன்மகாதேவி சாலைகளை இணைத்து வட்டச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?